இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

1648 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

பதவிகள் - வெற்றிடம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகளும் பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும் மேற்படி வர்த்தமானியில் பார்க்கவும்

பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு, இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - மட்டக்களப்பு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2010, சித்திரை மாதம் 30 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2010, பங்குனி 10.

அட்டவணை

மாவட்டம்	பிரதேச செயலாளர் பிரிவு	விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும்	விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி
மட்டக்களப்பு	மண்முனைப்பற்று தெற்கு மற்றும் எருவில் போரதீவு பற்று	கோட்டைக்கல்லாறு பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் மண்முனைப்பற்று தெற்கு மற்றும் எருவில் போரதீவுபற்று பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி	மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், மட்டக்களப்பு

4-57

பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

அற்றோணித் தத்துவத்தை மீளப்பெறல்

நிட்டம்புவ, நாப்பாகொட, கண்டி வீதி, இலக்கம் 117/ஏ என்ற முகவரியில் வசிக்கும் கஜநாயக்க கங்காணம்லாகே துமிந்த பத்மகுமார கஜநாயக்க ஆகிய என்னால் கம்பஹா பிரசித்த நொத்தாரிசு எச். எம். எம். பசீல் என்பவரினால் 2009.03.20 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்ட 301 ஆம் இலக்க விசேட அற்றோணித் தத்துவப்பத்திரம் மூலமாக கஹடோவிட்ட, குருவலாண இலக்கம் 91/ 11 இல் வசிக்கும் முகமட் ராசிக் முகமட் பயாஸ் என்பவருக்கு வழங்கப்பட்டிருந்த அற்றோணி அதிகாரத்தினை 2010.01 இல் இருந்து இரத்துச்செய்து மீளப்பெற்றுக்கொண்டேன் என பகிரங்கமாக அறியத்தருகிறேன். இன்றிலிருந்து மேற்குறிப்பிட்ட அற்றோணிப் பத்திரத்தினை வைத்து குறிப்பிட்ட நபரினால் செய்யப்படுகின்ற எந்தவொரு நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாளியல்ல என்பதனை அறியத்தருகின்றேன்

கஜநாயக்க கங்காணம்லாகே துமிந்த பத்மகுமார கஜநாயக்க.

4-144

அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

வாய்க்கால், றங்கமுள்ள, இலக்கம் 147 இல் வசிப்பவரான வர்ணகுலசூரிய பிறிஸ்கா நிமந்தி பர்னாந்து அல்லது வர்ணகுலசூரிய கிறிஸ்கா நிமந்தி பர்னாந்து ஆகிய நான், இலங்கை குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் இத்தால் தெரிவித்துக்கொள்வதாவது,

வாய்க்கால் கிழக்கு அங்கம்பிட்டி இலக்கம் 1 இல் வசிப்பவரான வர்ணகுலசூரிய அன்றனட் மேரி றோஸ் த மெல் என்பவருக்கு ஒப்படைத்திருந்த அற்றோணி உறுதியை பிரசித்த நொத்தாரிசு சுறங்கா பர்னாந்து அவர்களின் முன்னிலையில் 3290 ஆம் இலக்க 2010.10.01 ஆந் திகதி எழுதிய மேற்படி அற்றோணி உரிமையை இரத்துச்செய்து நிராகரித்து உள்ளது என்பதையும் இன்று தொடக்கம் அவருடன் எவ்வித கொடுக்கல் வாங்கலும் இல்லை எனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

வர்ணகுலசூரிய பிறிஸ்கா நிமந்தி பர்னாந்து (அல்லது)
வர்ணகுலசூரிய கிறிஸ்கா நிமந்தி பர்னாந்து.

2010.03.05.
4-37

அற்றோணித் தத்துவத்தை இரத்துச்செய்தல்

வென்னப்புவை, உல்ஹிடியாவவை வசிப்பிடமாகக் கொண்ட பிரசித்த நொத்தாரிசு ஹேவா பொன்சேகாகே ஜோசப் டென்சில் பொன்சேகா அவர்களால் 2005.03.04 ஆந் திகதி உறுதிப்படுத்திய 26289 ஆம் இலக்க அற்றோணித் தத்துவத்தின் மூலம் வென்னப்புவை, உல்ஹிடியாவவை வசிப்பிடமாகக் கொண்ட கொலமுன்னே மேஸ்திரிகே பிரதீப் தரங்க ஆரியனாத், வர்ணகுலசூரிய பிரியாணி ரொசிடா பிரணாந்து ஆகிய நாம் வென்னப்புவை, கிறிஸ்தவ ஆலய பாதை, ஜயமெதுரவை வசிப்பிடமாகக் கொண்ட வர்ணகுலசூரிய கிஹான் ஷாமல் பிரணாந்து அவர்களுக்கு கையளிக்கப்பட்ட சகல அற்றோணித் தத்துவங்களும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்பதை இத்தால் அனைவருக்கும் அறியப்படுத்துகின்றோம்.

கொலமுன்னே மேஸ்திரிகே பிரதீப் தரங்க ஆரியனாத்
மற்றும்
வர்ணகுலசூரிய பிரியாணி ரொசிடா பிரணாந்து.

4-38

அற்றோணித் தத்துவத்தை இரத்துச்செய்தல்

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், தும்மலசூரிய காவல் நிலையம் எதிரில் என்ற முகவரியைச் சேர்ந்த கஹவே விதானலாகே யஸவத்தி ஆகிய நான், காவல் நிலையம் எதிரில் தும்மலசூரிய என்ற மேற்படி முகவரியைக் கொண்ட கஹவே விதானலாகே இந்திக பத்மகுமாரவுக்கு குளியாப்பிட்டிய பிரசித்த நொத்தாரிசு ஜே. ஏ. நிஹால் ஜயசிங்கவால் 2007.08.08 ஆந் திகதி அத்தாட்சி செய்யப்பட்ட 2207 ஆம் இலக்கமுடைய அற்றோணி தத்துவப் பத்திரத்தின் மூலம் நான் வழங்கிய சகல தத்துவங்களையும் இன்று 2010.03.16 ஆந் திகதி முதல் இரத்துச்செய்து விட்டேன் என்பதையும், இத்திகதி முதல் இத்தத்துவப் பத்திரம் செல்லாது என்பதையும் இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்துக்கும் பொதுமக்களுக்கும் அறியத் தருகிறேன்.

கஹவே விதானேலாகே யஸவதி.

4-50/1

அற்றோணித் தத்துவத்தை இரத்துச்செய்தல்

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், தும்மலசூரிய காவல் நிலையம் எதிரில் என்ற முகவரியைச் சேர்ந்த கஹவே விதானலாகே யஸவத்தி ஆகிய நான், காவல் நிலையம் எதிரில் தும்மலசூரிய என்ற மேற்படி முகவரியைக் கொண்ட கஹவே விதானகெதர இமல்கா சிறிலால் ஹரிஸ்சந்திரவுக்கு குளியாப்பிட்டிய பிரசித்த நொத்தாரிசு ஜே. ஏ. நிஹால் ஜயசிங்கவால் 2007.08.08 ஆந் திகதி அத்தாட்சி செய்யப்பட்ட 2206 ஆம் இலக்கமுடைய விசேட அற்றோணி தத்துவப் பத்திரத்தின் மூலம் நான் வழங்கிய சகல தத்துவங்களையும் இன்று 2010.03.16 ஆந் திகதி முதல் இரத்துச்செய்து விட்டேன் என்பதையும், இத்திகதி முதல் இத்தத்துவப்பத்திரம் செல்லாது என்பதையும் இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்துக்கும் பொதுமக்களுக்கும் அறியத்தருகிறேன்.

கஹவே விதானேலாகே யஸவதி.

4-50/2

அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 ஆம் விதிகளின்கீழ் கூட்டிணைப்பு அறிவித்தல்

கம்பனியின் பெயர் : நைன் ஸ்போர்ட்ஸ் என்டர்டெய்ன்மன்ட் (பிறைவேட்) லிமிட்டெட்

பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 10/20ஏ, லேக் ட்ரைவ், எனக்லேவ், லேக் ட்ரைவ், கொழும்பு 8

பதிவு இலக்கம் : பீவீ 70841

4-28

அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் விதிகளின்கீழ் ஒன்றிணைக்கப்பட்ட கூட்டிணைப்பு அறிவித்தல்

(1) கம்பனியின் பெயர் : ஐடியாஸ் கன்ஸல்டன்ஸி (பிறைவேட்) லிமிட்டெட்
(2) கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 71337
(3) பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் விலாசம் : இல. 181/1, எகொட உயன, மோதர, மொறட்டுவை
(4) ஒன்றிணைக்கப்பட்ட திகதி : 2010, மாச்சு 04

கம்பனிச் செயலாளர்.

4-14

அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டவாக்கத்தின் கீழான பகிரங்க அறிவித்தல்

கம்பனியின் பெயர் : எஸ். ஆர். ஜெம்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 71260
கம்பனியின் முகவரி : இல. 54 2/2, ஒஸ்ட்ரேலியா பில்டிங், யோக் ஸ்றீற், கொழும்பு 1

இயக்குநர்கள்.

4-23

அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவுக்கு அமைய, கீழ்க்குறிப்பிடப்பட்ட விபரங்கள் கொண்ட கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

கம்பனியின் பெயர் : அபெக்ஷர் ஃபேர்டிலிட்டி கெயார் (பிறைவேட்) லிமிட்டெட்

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, ஏப்பிறல் மாதம் 9 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, மாச்சு மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

லக்ஷ்மன் குணவர்தன,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்பட்டது.

கம்பனியின் இலக்கம் : பீவீ 71059
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 4ஏ 2/1, பாகொட வீதி, நுகேகொடை
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2010.02.15
பினான்ஷியல் அன்ட் பிஸ்னஸ் அசோசியேட்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

4-25/1

அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவுக்கு அமைய, கீழ்க்குறிப்பிடப்பட்ட விபரங்கள் கொண்ட கம்பனி கூட்டிணைக்கப் பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

கம்பனியின் பெயர் : என்ஏஜி ஓல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : டீவீ 71269
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 42பி, வால்ட்டர் குணசேகர மாவத்தை, நாவல
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2009.11.23
பினான்ஷியல் அன்ட் பிஸ்னஸ் அசோசியேட்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

4-25/2

அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவுக்கு அமைய, கீழ்க்குறிப்பிடப்பட்ட விபரங்கள் கொண்ட கம்பனி கூட்டிணைக்கப் பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

கம்பனியின் பெயர் : வொசுன் என்டபிரைசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 71404
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 96, போறுத்தோட்ட றோட், லுவிஸ் பிளேஸ், ஏத்துக்கால், நீர்கொழும்பு
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2010.03.09
பினான்ஷியல் அன்ட் பிஸ்னஸ் அசோசியேட்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

4-25/3

அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவுக்கு அமைய, கீழ்க்குறிப்பிடப்பட்ட விபரங்கள் கொண்ட கம்பனி கூட்டிணைக்கப் பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

கம்பனியின் பெயர் : வொசுன் பிளஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 71366
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 567, பிரின்ஸ் ஒப் வேல்ஸ் அவெனியூ, கொழும்பு 14
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2010.03.04
பினான்ஷியல் அன்ட் பிஸ்னஸ் அசோசியேட்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

4-25/4

அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, பத்தரமுல்லை, சிங்கபுர தலங்கம தெற்கு, இல. 826 (ஆளடையாள அட்டை இல. 480171039V), அபேசேக்கர ஆராச்சிகே வசந்த சேனாரத்ன ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு சந்தலங்காவ, ஹெந்தியாகல மலமங்கலி (ஆளடையாள அட்டை இல. 720541955V) ஐச் சேர்ந்த ஹெட்டி யாராச்சிகே தெமியன் ஜயலால் என்பவரை கூறப்பட்ட 2569 ஆம் இலக்க அற்றோணித் தத்துவத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் மற்றும் விவகாரங்களில் ஈடுபட எனது உண்மையான சட்டப்படி யான அற்றோணியாக நியமனம் செய்யும் பகிரங்க நொத்தாரிசு யூ. ஏ. பிரேமசுந்தர என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 2007, ஓகத்து 13 ஆந் திகதிய 2569 ஆம் இலக்கம் கொண்ட அற்றோணி தத்துவத்தை இத்தால் இரத்துச்செய்து செல்லுபடியற்றதாக்குகிறேன்.

குறிப்பிட்ட திகதி தொடக்கம் கூறப்பட்ட ஹெட்டியாராச்சிகே தெமியன் ஜயலால் என்பவரால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் பொறுப்பாக மாட்டேன் எனவும் அறிவிக்கிறேன்.

அபேசேக்கர ஆராச்சிகே வசந்த சேனாரத்ன.

கொழும்பு,
2010, மாச்சு 1.
4-49

அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்படி பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என நாம் இத்தால் அறிவிக்கின்றோம் :-

கம்பனியின் பெயர் : யூசர் ப்ரண்ட்லி சொலுசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 70901
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 44, ரட்னாவலி வீதி, களுபோவிலை
வியாபார முகாமைத்துவச் சேவைகள் லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்.

4-146

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்ட சரத்து 346(1) இன் கீழ் 'வயம்ப டெவலெப்மென்ட் பாமிங் கோப்பரேஷன் லிமிட்டெட்' எனும் கம்பனியின் இணை கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல்

(கம்பனியின் பதிவு இல. என் (பீபிஎஸ்) 1085)

கம்பனியின் பெயர் : வயம்ப டெவலெப்மென்ட் பாமிங் கோப்பரேஷன் லிமிட்டெட்
பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 22/1ஏ, வைத்தியா றோட், தெகிவளை
நீதிமன்றம் : வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
வழக்கு இலக்கம் : எச்சி (சிவில்) 35/2009/சீஓ
இணை கம்பனி கலைப்பாளர்களின் பெயர் : பீ. ஈ. ஏ. ஜயவிக்ரம அன்ட் ஜீ. ஜே. டேவிட்
முகவரி : சீ/ஓ எஸ்ஜேஎம்எஸ் அசோசியேட்ஸ், ரிஸ்ட்ரக்சர் அன்ட் கோர்ப்பரேட் ரிகவரி, லெவல் 4, இல. 2, காசல் லேன், கொழும்பு 4
நியமனத் திகதி : 2010.03.01

4-80/2

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டப் பகுதி XII இன்கீழான கம்பனி கலைப்பு உத்தரவு பற்றிய அறிவித்தல்

(கம்பனியின் பதிவு இல. என் (பீபிஎஸ்) 1085)

கம்பனியின் பெயர் : வயம்ப டெவலெப்மென்ட் பாமிங் கோப்பரேஷன் லிமிட்டெட்
பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 22/1ஏ, வைத்தியா றோட், தெகிவளை
நீதிமன்றம் : வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
வழக்கு இலக்கம் : எச்சி (சிவில்) 35/2009/சீஓ
நீதிமன்ற கட்டளைத் திகதி : 2010.03.01
கோரிக்கை தாக்கல் செய்த திகதி : 2009.06.12
கம்பனி கலைப்பாளர்களின் பெயர் : பீ. ஈ. ஏ. ஜயவிக்ரம அன்ட் ஜீ. ஜே. டேவிட்
முகவரி : சீ/ஓ எஸ்ஜேஎம்எஸ் அசோசியேட்ஸ், ரிஸ்ட்ரக்சர் அன்ட் கோர்ப்பரேட் ரிகவரி, லெவல் 4, இல. 2, காசல் லேன், கொழும்பு 4

4-80/1

அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(1) விதிகளின்கீழ் விடுக்கப்படும்

கம்பனியின் பெயர் : அய்டியாஹப் (பிறைவேட்) லிமிட்டெட்
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2009.12.15
பதிவிலக்கம் : பீவீ 70364
பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 25/3, கனத்த வீதி, பொரலஸ்கமுவ

4-71

அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(1) விதிகளின்கீழ் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனி 2010, பெப்புருவரி 19 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டது :-

கம்பனியின் பெயர் : றோசகுசும ஓப்-செட் பிரின்டர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 71163
பதிவுசெய்யப்பட்ட முகவரி : றோசகுசும ஓப்-செட் பிரின்டர்ஸ், றோசகுசும மாவத்தை, கொலின்ஜாடிய, வென்னப்புவை
பணிப்பாளர்.

4-105

பகிரங்க அறிவித்தல்

ஹேலீஸ் இன்டஸ்ட்ரியல் சொலூசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் (கம்பனி இலக்கம் பீபி 753 பீவீ)
பயோஃபுயல்ஸ் டீ இசட் (பிறைவேட்) லிமிட்டெட்
(கம்பனி இலக்கம் பீவீ 5280) ஆகியவற்றின் ஒருங்கிணைப்பு

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் (''அதிகாரச் சட்டம்'') 242(3) பி பிரிவிற்கு அமைய இந்த அறிவித்தல் விடுக்கப்படுகிறது. ஹேலீஸ் இன்டஸ்ட்ரியல் சொலூசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் (கம்பனி இலக்கம் பீபி 753 பீவீ), பயோஃபுயல்ஸ் டீ இசட் (பிறைவேட்) லிமிட்டெட் (கம்பனி இலக்கம் பீவீ 5280) என்பன அதிகாரச் சட்டத்தின் 242 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய ஒரே நிறுவனமாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைக்கப்பட்ட கம்பனியின் பெயர் ஹேலீஸ் இன்டஸ்ட்ரியல் சொலூசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் என்பதாகும். இந்த ஒருங்கிணைப்பு 2010, ஏப்பிறல் 15 ஆந் திகதி அல்லது கம்பனிகள் பதிவாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்படும் திகதியில் நடைமுறைக்கு வரும்.

ஒருங்கிணைக்கப்பட்ட கம்பனியான ஹேலீஸ் இன்டஸ்ட்ரியல் சொலூசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டின் பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி இல. 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,
ஹேலீஸ் குரூப் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

இல. 400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10,
2010, மாச்சு 11.
4-106

கம்பனியின் பதிவுபற்றிய அறிவித்தல்

கீழே பெயர் மற்றும் முகவரி குறிப்பிடப்பட்டுள்ள கம்பனி 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(1) விதிகளின்கீழ் பதிவுசெய்யப் பட்டுள்ளது :-

கம்பனியின் பெயர் : வொயேஜர் க்ளோபல் (பிறைவேட்) லிமிட்டெட்
கூட்டிணைப்பு இலக்கம் மற்றும் திகதி : பீவீ 70893 ; 2010.02.01
பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 280/1, காலி வீதி, கல்கிசை
கன்சல்டன்ட்ஸ் அன்ட் கோர்ப்பரேட்
செக்ரடரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

தொலைபேசி இல. : 2689618.
2010, பெப்புருவரி 15.
4-109/1

கம்பனியின் பதிவு பற்றிய அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(1) விதிகளுக்கமைய கம்பனியின் கூட்டிணைப்பு அறிவித்தல் கீழே குறிப்பிடப் பட்டுள்ளது :-

கம்பனியின் பெயர் : கிறீன் எட்ஜ் (பிறைவேட்) லிமிட்டெட்
கூட்டிணைப்பு இலக்கம் மற்றும் திகதி : பீவீ 70874 ; 2010.01.28
பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 374/18, டெம்பிள் றோட், தலவத்துகொடை
கன்சல்டன்ட் அன்ட் கோர்ப்பரேட்
செக்ரடரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

தொலைபேசி இல. : 2689618.
2010, பெப்புருவரி 02.
4-109/2

கம்பனியின் பதிவு பற்றிய அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் கீழே பெயர், முகவரி குறிப்பிடப்படும் கம்பனி, கம்பனி பதிவாளரிடம் ஓர் கம்பனியாக பதிவுசெய்யப்படுகிறது :-

கம்பனியின் பெயர் : சிலோன் ரெயா ஏர்த் (பிறைவேட்) லிமிட்டெட்
கூட்டிணைப்பு இலக்கம் மற்றும் திகதி : பீவீ 64897 ; 2008.07.22
பதிவு அலுவலக முகவரி : இல. 4/49, 3 ஆம் லேன், தலகொட்டுவ
கார்டன்ஸ், கொழும்பு 5
கன்சல்டன்ட் அன்ட் கோர்ப்பரேட்
செக்ரடரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

தொலைபேசி இல. : 2689618.
2010, மாச்சு 1.
4-109/3

கம்பனியின் பதிவு பற்றிய அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் விதிகளுக்கமைய இங்கு குறிப்பிடப்படும் பெயர், முகவரியின்கீழ் கம்பனிகளின் பதிவாளர் அதிபதியிடம் பதிவுசெய்துள்ள ஒரு கம்பனியாகும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

கம்பனியின் பெயர் : ஆர். என். டீ. ஒஸ்ட்ரேலியன் எட்யுகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்
கூட்டிணைப்பு இலக்கம், திகதி : பீவீ 69833 ; 2009.11.05
பதிவு அலுவலக முகவரி : இல. 282, 1 ஆம் மாடி, கொழும்பு றோட், திவுலபிட்டிய, பொரலெஸ்கமுவ
கன்சல்டன்ட் அன்ட் கோர்ப்பரேட்,
செயலாளர்கள்.

தொலைபேசி இல. : 2689618.
4-109/4

கம்பனியின் பதிவு பற்றிய அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் விதிகளுக்கமைய இங்கு குறிப்பிடப்படும் பெயர், முகவரியின்கீழ் கம்பனிகளின் பதிவாளர் மா அதிபதியிடம் பதிவுசெய்துள்ள ஓர் கம்பனியாகும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

கம்பனியின் பெயர் : ஓல் ஐலண்ட் போல்ட்ரி அசோசியேசன் (பிறைவேட்) லிமிட்டெட்
கூட்டிணைப்பு இலக்கம், திகதி : ஜீஏ 2331 ; 2009.12.24
பதிவு அலுவலக முகவரி : இல. 503, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, எதுல் கோட்டே
கன்சல்டன்ட் அன்ட் கோர்ப்பரேட்
செக்ரடரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

தொலைபேசி இல. : 2689618.
4-109/5

நிறுவனத்தின் பெயர் மாற்றம் பற்றிய பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவிற்கமைய, கீழ்குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட பொறுப்புக்களை யுடைய தனியார் கம்பனி தனது பெயரினை 2010, மாச்சு 15 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு மாற்றியுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றோம் :-

கம்பனியின் முன்னைய பெயர் : யுனிட் ட்ரஸ்ட் மனேஜ்மன்ற் கொ. (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 3326
கம்பனியின் புதிய பெயர் : சீபாங்க் அசெற் மனேஜ்மன்ற் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி : 3 ஆம் மாடி, இலங்கை வங்கிக் கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு 1
கார்சன் மனேஜ்மன்ற் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

2010, மாச்சு 26.
4-127

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

9(1) ஆம் பிரிவின்கீழ் கூட்டிணைத்தலுக்கான அறிவித்தல்

கம்பனியின் பெயர் : சியத்ம இன்டர்நெஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 69951
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2009.11.13
கூட்டிணைக்கப்பட்ட அலுவலக முகவரி : இல. 36/3, ரோஹண மாவத்தை, சுபுதிபுர, பத்தரமுல்லை
கம்பனிச் செயலாளர்.

4-126

அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(5) ஆம் பிரிவின்கீழ் கீழ்க்காணும் கம்பனியின் பெயர்மாற்றம் தொடர்பாக இத்துடன் அறிவித்தல் வழங்குகின்றோம் :-

கம்பனியின் முன்னாள் பெயர் : சிலோன் டீ புரோக்கர்ஸ் லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீபி 1280
பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி : லெவல். 5, "மிலேனியம் ஹவுஸ்", 46/58, நவம் மாவத்தை, கொழும்பு 2
கம்பனியின் புதிய பெயர் : சிலோன் டீ புரோக்கர்ஸ் பீ.எல்.சீ.

கம்பனி சார்பாக,
பீ. டபிள்யூ. கோப்பரேட் செடேரியல்
(பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

4-159

அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் கீழ்க்காணும் கம்பனியானது கூட்டிணைக்கப்படுவதாக இத்தால் அறிவிக்கப் படுகிறது :-

கம்பனியின் பெயர் : உப்புவேலி பீச் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு அலுவலகம் : 'ஜெட்விங் ஹவுஸ்', இல. 46/26, நவம் மாவத்தை, கொழும்பு 2
பதிவு இலக்கம் : பீவீ 71289
கோப்பறேட் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

4-162

அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் கீழ்க்காணும் கம்பனியானது கூட்டிணைக்கப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

கம்பனியின் பெயர் : த ஃபர்ஸ்ட் ரெசோட் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு அலுவலகம் : 'ஜெட்விங் ஹவுஸ்', இல. 46/26, நவம் மாவத்தை, கொழும்பு 2
பதிவு இலக்கம் : பீவீ 71247

கோப்பறேட் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

4-163

வரையறுக்கப்பட்ட நிறுவனமொன்றை கூட்டிணைப்பதற்கான பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் செய்யப்படும் அறிவித்தல்

நிறுவனத்தின் பெயர் : அஸ்டன் எடியுகேஷன் சென்டர் (தனியார்) நிறுவனம்
நிறுவனத்தின் இலக்கம் : பீவீ 71198
பதிவு முகவரி : இல. 8/பீ, வஜிர றோட், கொழும்பு 4
பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி.

4-166

ஏல விற்பனைகள்

மக்கள் வங்கி - இரத்தினபுரி நகரக் கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டீ பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்

இரத்தினபுரி மாவட்டம், குருவிட கோறளை தெற்கு உடபத்து இரத்தினபுரி அரசிறை கட்டுப்பாட்டு உத்தியோகத்தர் பிரிவில் இரத்தினபுரி மாநகரசபை எல்லைக்குள் இரத்தினபுரி நகர கிராம சேவகர் பிரிவில் பிரதான பாதைக்கு முகம் நோக்கி அமைந்துள்ள "மஹபொரலெஸ்ஸ ஓவிட" என அழைக்கப்படும் காணியில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். இராமகிருஷ்ணன் அவர்களின் 1978.08.04 ஆந் திகதிய 1177 ஆம் இலக்கம் கொண்ட வரைபடத்தில் துண்டு இல. எச். கொண்ட பூமிப்பகுதி விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 8.7பே.) அதில் அமைந்துள்ள கட்டிடங்கள் ஆகிய சகலதும் ஏலவிற்பனை

மக்கள் வங்கியினால் என்மீது சாட்டப்பட்ட அதிகாரத்தின்கீழ் என்னால் 2010, ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள இடத்திலேயே பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

2002.04.25 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை மற்றும் 2002.06.13 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "தினகரன்", "தினமின" பத்திரிகைகளில் பிரசுரித்துள்ள ஏலவிற்பனை தீர்மான அறிவித்தலுக்கு அவதானத்தைச் செலுத்தவும்.

ஆதனத்திற்குள் பிரவேசித்தல்.- இரத்தினபுரி நகரத்திலிருந்து பதுளைப் பாதையில் 500 மீற்றர் அளவு போனதும் பிரதான வீதியில் சந்திக்கும் வரிப்பணம் இல. 189 கொண்ட இடதுபக்கமாக இருக்கும் கட்டிடமாகும்.

கொடுப்பனவு செலுத்தும் முறை.- ஏலத்தின் இறுதியில் வெற்றியான கொள்வனவுகாரரால் கீழ்க்காணும் விதமாக பணத்தால் செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்விலையின் பத்து வீதம் (10%) ;
(2) உள்ளூராட்சி அதிகாரசபையின் வரிக்கென உள்ளூராட்சி அதிகாரசபைக்கு செலுத்தவேண்டிய ஒரு வீதம் (1%) ;
(3) ஏலதாரரின் தரகாக விற்பனை விலையின் இரண்டரை வீதம் (2 1/2%) ;
(4) இலிகிதர் மற்றும் அறிவிப்பாளரினதும் கட்டணமாக ரூபா 500 ;
(5) விற்பனைச் செலவும் ஏனைய கட்டணங்கள் இருப்பின் அப்பணம் ;
(6) விற்பனைச் சான்றிதழுக்குரிய முத்திரைக் கட்டணம்.

கொள்விலையின் மிகுதி 90% ஆன பணத்தை விற்பனைத் திகதியிலிருந்து 30 தினங்களுக்குள் "மக்கள் வங்கி-பிராந்திய தலைமை அலுவலகம், இல. 54, புதிய நகர், இரத்தினபுரி, பிராந்திய முகாமையாளர்" இற்குச் செலுத்த வேண்டும். தொலைபேசி இல. 045-2223084, 045-2230818.

உரிமை உறுதியையும் ஏனைய உரிய விபரங்களையும் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

மேல் குறிப்பிடப்பட்ட பிரகாரம் குறிப்பிட்ட பணம் 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் தற்போதைக்கே செலுத்தியிருக்கும் கொள்விலை யின் 10% பணம் திருப்பிச் செலுத்தாமல் இருப்பதற்கும் மீண்டும் ஆதனத்தை விற்பதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.

ஏ. எஸ். லியனகே (ச. நீ.),
நீதிமன்ற ஆணையாளர், அதிகாரம்பெற்ற ஏலதாரர்,
மதிப்பீட்டாளர், சத்தியப்பிரமாணம் செய்த
மொழிபெயர்ப்பாளர்.

இல. 228/ஏ, வலவ்வத்தை,
கெஸ்பாவை,
பிலியந்தலை.
தொலைபேசி இல. 2703478, 0777-459823.
4-70

செலான் வங்கி பீ.எல்.சீ – பலாங்கொடை கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை

சொத்துக்கள் ஏல விற்பனை

("கடன்பட்டோர்" என்ற வகையில் பலாங்கொடையைச் சேர்ந்த அலாப்டீன் மொகமட் இஸாட் என்பவருக்காக வழங்கப்பட்ட வசதிக்காக செலான் வங்கி பீ.எல்.சீ.க்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து.)

முதலாவது ஏல விற்பனை

1. சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டத்தில், மெடகோரளை கெலஉட பலாத்தவில் கிரிமெட்டிடென்ன எனும் கிராமத்தில் அமைந்துள்ள லங்காபரன எஸ்டேட் என்று அழைக்கப்படுகின்ற காணியை அனுமதிபெற்ற நில அளவையாளர் ஈ. டி. பி. பெரேராவினால் 2005.10.03 ஆந் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட நிலவரைபட இல. 2124 இன் சகலதும் பிரிக்கப்பட்டு அடையாளமிடப்பட்டு அறியப்பட்டுள்ள துண்டு 1 கட்டிடங்கள், பெருந்தோட்டம் மற்றும் அனைத்துடன் மூப்பத்தொன்பது பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 39பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுடன் பொது வீதி ஒதுக்கத்திற்காக நிலவரைபட இல. 1818 இன் நிலஅளவையாளர் ஈ. டி. பி. பெரேராவினால் விபரிக்கப்பட்டுள்ளது.

2. கிரிமெட்டிடென்ன எனும் கிராமத்தில் அமைந்துள்ள லங்காபரன எஸ்டேட் என்று அழைக்கப்படுகின்ற காணியை அனுமதிபெற்ற நில அளவையாளர் ஈ. டி. பி. பெரேராவினால் 2005.10.03 ஆந் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட நிலவரைபட இல. 2124 இன் சகலதும் பிரிக்கப்பட்டு அடையாளமிடப்பட்டு அறியப்பட்டுள்ள துண்டு 2 கட்டிடங்கள், பெருந்தோட்டம் மற்றும் அனைத்துடன் ஒரு நூட் பதினேழு பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 17பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுடன் பொது வீதி ஒதுக்கத்திற்காக நிலவரைபட இல. 1818 இன் நிலஅளவையாளர் ஈ. டி. பி. பெரேராவினால் விபரிக்கப்பட்டுள்ளது.

மேலே விபரிக்கப்பட்ட சொத்தை 2010, ஏப்பிறல் 30 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

காணியைச் சென்றடைகின்ற விதம்.- பலாங்கொடை நகரத்திலி ருந்து கல்தோட்ட வீதி மார்க்கமாக 2.75 கி. மீ. தூரத்தில் டெகிஹஸ்டலாவ சந்தியிலிருந்து சுமார் 2 1/2 கி. மீ. தூரத்தில் இடதுபக்கமாக உள்ள தார் வீதியினூடாக திரும்பி (தொட்டுபொல தென்ன அமைந்த பகுதி) சுமார் 250 மீற்றர் சென்று இடதுபுறமாக மீண்டும் திரும்பி (லங்கா வோல் டைல்ஸ் வீடமைப்புத் திட்டத்திற்கு எதிராக) உள்ள 20 அடி அகலமான கிரவல் மார்க்கமாக 10 மீற்றர் தூரம் பயணம் செய்து இறுதியில் வலதுபுறமாக உள்ள 10-20 அடி அகலமான கிரவல் பாதை வழியாக 150 மீற்றர் சென்றால் குறிக்கப்பட்ட சொத்து இடதுகை பக்கத்தில் அமைந்திருக்கும்.

மேற்கூறப்பட்ட சொத்தின் துண்டு 1, லங்காபரன எஸ்டேட், லங்கா வோல் டைல்ஸ் வீடமைப்புத் திட்ட வீதி, தெஹிஹல்டலாவ, பலாங் கொடை என்ற முகவரியில் அடையாளம் காணக்கூடியதாக உள்ளது.

இரண்டாவது ஏல விற்பனை

1. சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டத்தில், மெடகோரளை கெலஉட பலாத்தவில் பலாங்கொடை பிரிவில் உள்ள பிரதேச செயலாளர் பிரிவில் தெஹிகஸ்தலவவில் அமைந்துள்ள (எப். வீ. பீ. 287 இன் ஒரு பகுதியான துண்டு 82 பொது நிலஅளவையாளரினால் உறுதிப்படுத்தப் பட்டது) லங்கா பரன எஸ்டேட் என்று அழைக்கப்படுகின்ற காணியை அனுமதி பெற்ற நில அளவையாளர் ஈ. டி. பி. பெரேராவினால் 2005.11.03 இல் தயாரிக்கப்பட்டு திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 2152 இன் சகலதும் பிரிக்கப்பட்டு அடையாளமிடப்பட்டு அறியப்பட்டுள்ள துண்டு 1 கட்டிடங்கள், பெருந்தோட்டம் மற்றும் அனைத்துடன் ஒரு நூட் ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 5பே.) அல்லது 0.1139 ஹெக்டெயர் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.

தற்பொழுது இரத்தினபுரி காணிப் பதிவகத்தில் பதிவுசெய்யப் பட்டுள்ள மேலே விபரிக்கப்பட்ட சொத்தின் விபரம் பின்வருமாறு :

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டத்தில் மெடகோரளை கெலஉட பலாத்தவில் பலாங்கொடை பிரிவிலுள்ள பிரதேச செயலாளர் பிரிவில் தெஹிகஸ் தலாவவில் அமைந்துள்ள லங்காபரன எஸ்டேட் (பகுதி) என்று அழைக்கப்படுகின்ற காணியை அனுமதிபெற்ற நிலஅளவையாளர் ஈ. டி. பி. பெரேராவினால் 2005.06.19 இல் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட நிலவரைபட இல. 2014 இன் சகலதும் பிரிக்கப்பட்டு அடையாளமிடப்பட்டு அறியப்பட்டுள்ள துண்டு 1 மற்றும் அனைத்துடன் ஒரு நூட் ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 05பே.) அல்லது 0.1139 ஹெக்டேயர் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.

மேலே விபரிக்கப்பட்ட சொத்தை 2010, ஏப்பிறல் 30 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

காணியைச் சென்றடைகின்ற விதம்.- பலாங்கொடை நகரத்திலி ருந்து பதுளை வீதி மார்க்கமாக சுமார் 1/2 கி. மீ. தூரம் சென்று தும்பகொட சந்தியினால் இடதுபுறமாகத் திரும்பி ரசகல்ல வீதி மார்க்கமாக 200 மீற்றர் சென்று மீண்டும் வலதுபுறமாக உள்ள சட்னோல் வீதியால் சுமார் 75 மீற்றர் பிரயாணம் செய்து இறுதியாக வலதுபுறமாக உள்ள தார் போடப்பட்ட நகரசபை வீதியால் திரும்பினால் குறிக்கப்பட்ட சொத்து வலதுபுறமாக 75 மீற்றர் தூரத்தில் அமைந்திருக்கும்.

நான்காவது ஏல விற்பனை

1. சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டத்தில், பலாங்கொடை பிரிவிலுள்ள பிரதேச செயலாளர் பிரிவில் தெஹிஹஸ்தலாவயில் உள்ள கிராம அலுவல்கள் பிரிவான 250பி தெஹிஹஸ்தலாவயில் அமைந்துள்ள புளோக் 3 கடஸ்ரல் வரைபட பகுதி இல. 620072 பகுதி இல. 67 இற்கு அமைய சகலதும் பிரிக்கப்பட்டு அடையாளமிடப்பட்டு அறியப்பட்டுள்ள துண்டு மற்றும் அனைத்துமுடன் சைபர் தசம் மூன்று ஒன்பது நான்கு ஒன்று (0.3941) ஹெக்டெயார் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுடன் தலைப்புப்பத்திரம் இல. 0003271 இல் 2007.02.20 ஆந் திகதியிடப்பட்டு பதிவாளரினால் இரத்தினபுரி காணிப்பதிவகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேலே விபரிக்கப்பட்ட சொத்தை 2010, ஏப்பிறல் 30 ஆந் திகதி மு. ப. 11.45 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

காணியைச் சென்றடைகின்ற விதம்.- பலாங்கொடை நகரிலிருந்து கல்போட்ட வீதி மார்க்கமாக 2 கி. மீற்றர் தூரத்தில் (2 ஆம் கி. மீற்றர் கட்டையைக் கடந்து சுமார் 25 மீற்றர்) சென்றால் குறிக்கப்பட்ட சொத்து வலதுகைப் பக்கத்தில் அமைந்திருக்கும்.

மேற்கூறப்பட்ட சொத்து துண்டு 2 ஹொலுவைஹென, கல்தொட்ட வீதி தெஹிஹஸ்லாவ, பலாங்கொடை என்ற முகவரியினால் அடையாளம் காணக்கூடியதாக உள்ளது.

தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.- 2009.07.31 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2009.07.20 ஆந் திகதிய "டெயிலி மிரர்", "லங்காதீப" பத்திரிகைகளையும் மற்றும் 2009.07.31 ஆந் திகதிய "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

கட்டணம் செலுத்தும் முறை.- வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%) ; (2) உள்ளூர் விற்பனை வரியாக உள்ளூர் அதிகார சபைக்கும் மற்றைய அரசாங்க அல்லது உள்ளூர் அதிகாரசபை வரிவிதிகளுக்கமைய ஒரு வீதம் (1%) உள்ளூர் விற்பனை வரியாக செலுத்தப்பட வேண்டும் ; (3) ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2 %) ; (4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2,000 ; (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூபா 500 ; (6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையில் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சீ. இல் வைப்புச்செய்தல் வேண்டும்.

காணி உறுதி, ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை "சிரேஷ்ட பொது முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீ. எல். சீ., செலிங்கோ செலான் டவர், இல. 90, காலி வீதி, கொழும்பு 3" என்ற விலாசத்தில் பெற்றுக்கொள்ளவும் பார்வையிடவும் முடியும். தொலைபேசி இல. : 2456285, 2456276, 2456284.

தயவுசெய்து ஏனைய விபரங்களுக்கு எமது இணையத்தள முகவரி www.eseylan.com இற்கு தொடர்புகொண்டு எமது சொத்தின் ஏலவிற்பனைத் தளத்திற்கு வருகை தரவும்.

துசித கருணாரத்ன (ஜே. பி.),
அனுமதிபெற்ற ஏலதாரர் மற்றும்
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்.

ரி. அன்ட் எச். ஒக்சன்,
இல. : 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவ.
தொலைபேசி : 2696155, 2572940 மற்றும் 060-2068185.
4-805

செலான் வங்கி பீ.எல்.சீ – மீரிகம கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை

சொத்துக்கள் ஏல விற்பனை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தின் நீர்கொழும்பு பதிவுப் பிரிவில் அளுத்குரு கோரளை தாசியபத்து மினுவாங்கொடை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் கொன்கஹாவத்த என்று அழைக்கப்படுகின்ற காணித்துண்டு 1 அனுமதிபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஏ. யூ. சேனரத் என்பவரால் தயாரிக்கப் பட்ட 2002.07.07 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 1854 இல் சகலதும் பிரிக்கப்பட்டு அறியப்பட்டுள்ள துண்டு 1 என அடையாள மிடப்பட்ட காணி, கட்டிடங்கள், மரங்கள், பெருந்தோட்டம் மற்றும் அனைத்துமுடன் இருபது தசம் ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 20.5பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது (நீர்கொழும்பு காணிப்பதிவ கத்தில் பரிமாணம்/ தலைப்பு சி867/ 45 இன்கீழ் பதிவுசெய்யப் பட்டுள்ளது.) ஏலவிற்பனை

("கடன்பட்டோர்" என்ற வகையில் மினுவாங்கொடையைச் சேர்ந்த அஹமட் முசீன் மொகமட் பைஸ் மற்றும் மொகமட் யூஸுவ் பரீஸா பீபீ பைஸ் என்பவர்களுக்காக வழங்கப்பட்ட வசதிக்காக செலான் வங்கி பீ.எல்.சீ.க்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து.)

மேலே விவரிக்கப்பட்ட சொத்தை 2010, ஏப்பிறல் 29 ஆந் திகதி பி. ப. 1.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

காணியைச் சென்றடைகின்ற விதம்.- மினுவாங்கொடை நகரிலிருந்து கொழும்பு வீதி மார்க்கமாக சுமார் 1 கி. மீ. தூரத்தில் உள்ள கலோலுவ சந்திவரை சென்று பின் வலதுபுறமாகத் திரும்பி லும்பினி பன்சல் வீதி மார்க்கமாக 800 மீற்றர் சென்று அதன் பின் இடதுபுறமாகத் திரும்பி டக்கிய வீதி மார்க்கமாக தொடர்ந்து சென்றால் குறிக்கப்பட்ட சொத்து வலது பக்கமாக வீதியின் அருகில் அமைந் திருக்கும்.

தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.- 2009.10.30 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2009.10.12 ஆந் திகதிய "டெயிலி மிரர்", "லங்காதீப" பத்திரிகைகளையும் மற்றும் 2009.10.15 ஆந் திகதிய "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

கட்டணம் செலுத்தும் முறை.- வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%) ; (2) உள்ளூர் அதிகாரசபைக்கான உள்ளூர் விற்பனை வரி அத்துடன் உள்ளூர் அதிகாரசபைக்கு உள்ளூர் விற்பனை வரி (ஒரு வீதத்திற்குப் பதிலாக) அரசினால் அல்லது உள்ளூர் அதிகாரசபையினால் விதிக்கப்பட்ட வேறு ஏனைய வரி ; (3) ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2 %) ; (4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2,000 ; (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூபா 500 ; (6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையில் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சீ. இல் வைப்புச்செய்யப்படல் வேண்டும்.

காணி ஒப்பினை மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களை "சிரேஷ்ட பொது முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீ. எல். சீ., செலிங்கோ செலான் டவர், இல. 90, காலி வீதி, கொழும்பு 3" என்ற விலாசத்தில் பெற்றுக்கொள்ளவும் பார்வையிடவும் முடியும். தொலைபேசி இல. : 2456285, 2456284, 2456276.

தயவுசெய்து எமது இணையத்தள முகவரி www.eseylan.com இற்கு தொடர்புகொண்டு எமது சொத்தின் ஏலவிற்பனை தளத்திற்கு வருகை தரவும்.

துசித கருணாரத்ன (ஜே. பி.),
அனுமதிபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்.

ரி. அன்ட் எச். ஒக்சன்,
இல. : 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவ.
தொலைபேசி : 2572940, 011-3068185.
4-155

செலான் வங்கி பீ.எல்.சீ – பட்டதாரிகள் தொழில் முயற்சிகளுக்கான கடன் கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை

சொத்துக்கள் ஏல விற்பனை

தென் மாகாணம், காலி மாவட்டத்தில் நான்கு ஹிரவட்ஸ்களுக் குட்பட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த போப்-பொத்தலவில் நாராவலவில் அமைந்துள்ள "சிற்ரஸ் வத்த" என்று அழைக்கப்படுகின்ற காணித்துண்டு 1ஏ, அனுமதிபெற்ற நிலஅளவையாளர் ஏ. டீ. ஏ. குணசேகர என்பவரால் தயாரிக்கப்பட்டு 1994.09.18 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபடம் இல. 348பி சகலதும் பிரிக்கப்பட்டு அடையாளமிடப்பட்ட காணித்துண்டு 1ஏ மணல், மரங்கள் அனைத்துடனும் பத்தொன்பது தசம் ஏழு பேர்ச்சுகள் (0ஏ. 3றூ. 19.7பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது (காலி காணிப்பதிவகத்தில் பதிவு இல. பி177/ 123 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.) ஏல விற்பனை

மேலே கூறப்பட்ட காணியின் மீள்அளவீடு பின்வருமாறு :-

தென் மாகாணம், காலி மாவட்டத்தில் நான்கு ஹிரவட்ஸ்களுக் குட்பட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த போப்-பொத்தலவில் நாராவலவில் அமைந்துள்ள "சிற்ரஸ் வத்த" என்று அழைக்கப்படுகின்ற காணித்துண்டு 1ஏ, அனுமதிபெற்ற நிலஅளவை யாளர் கே. விஜயபால பத்திரன என்பவரால் தயாரிக்கப்பட்டு 2007.10.15 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபடம் இல. 4141 சகலதும் பிரிக்கப்பட்டு அடையாளமிடப்பட்டு காணித்துண்டு 1ஏ மற்றும் (அனைத்துடனும்) பத்தொன்பது தசம் ஏழு சைபர் பேர்ச்சுகள் (0ஏ. 3றூ. 19.70பே.) அல்லது 0.0498 ஹெக்டயார் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது ஏலவிற்பனை

("கடன்பட்டோர்" என்ற வகையில் பொட்டலவைச் சேர்ந்த ஷம்பிகா ஜெயமினி ஜெயசிங்கவிற்கு வழங்கப்பட்ட வசதிக்காக செலான் வங்கி பீ.எல்.சீ.க்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து.)

மேலே விவரிக்கப்பட்ட சொத்தை 2010, மே 07 ஆந் திகதி பி. ப. 1.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

காணியைச் சென்றடைகின்ற விதம்.- காலி நகரத்திலிருந்து பிரதான வீதியினூடாக ஓல்கொட் மாவத்தை, கிரிம்புரா வீதியில் கரப்பிட்டியா வரை சென்று தலங்ஹகா சந்திவரை செல்லவும். தலங்கஹா சந்தியிலிருந்து மாப்பலகம வீதியால் நாரம்மல சந்திவரை சென்று இடதுபுறமாக உள்ள பொத்தல வீதிக்குச் செல்லவும். இப்பொழுது பொத்தல வீதியால் 2 கி. மீ. சென்றால் குறிக்கப்பட்ட காணி சதமினி ஸ்ரூடியோவின் வலதுபக்கமாக வாகனம் செல்லக்கூடிய பாதையில் அமைந்திருக்கும்.

தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.- 2009.12.24 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2009.12.17 ஆந் திகதிய "டெயிலி மிரர்", "லங்காதீப" பத்திரிகைகளையும் மற்றும் 2010.01.06 ஆந் திகதிய "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

கட்டணம் செலுத்தும் முறை.- வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%) ; (2) உள்ளூர் அதிகாரசபைக்கான உள்ளூர் விற்பனை வரி அத்துடன் உள்ளூர் அதிகாரசபைக்கு உள்ளூர் விற்பனை வரி (ஒரு வீதத்திற்குப் பதிலாக) அரசினால் அல்லது உள்ளூர் அதிகாரசபையினால் விதிக்கப்பட்ட ஏனைய வரி ; (3) ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2 %) ; (4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2,000 ; (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூபா 500 ; (6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையில் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சீ. இல் வைப்புச்செய்யப்படல் வேண்டும்.

காணி மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை "சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீ. எல். சீ., செலிங்கோ செலான் டவர், இல. 90, காலி வீதி, கொழும்பு 3" என்ற விலாசத்தில் பெற்றுக்கொள்ளவும் பார்வையிடவும் முடியும். தொலைபேசி இல. : 2456285, 2456284, 2456276.

தயவுசெய்து எமது இணையத்தள முகவரி www.eseylan.com இற்கு தொடர்புகொண்டு எமது சொத்தின் ஏலவிற்பனை தளத்திற்கு வருகை தரவும்.

துசித கருணாரத்ன (ஜே. பி.),
அனுமதிபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்.

ரி. அன்ட் எச். ஒக்சன்,
இல. : 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவ.
தொலைபேசி : 2572940, 011-3068185.

4-156

செலான் வங்கி பீ.எல்.சீ – பட்டதாரிகள் தொழில் முயற்சிகளுக்கான கடன் கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை

சொத்துக்கள் ஏல விற்பனை

வடமத்திய மாகாணம், அனுராதபுரம் மாவட்டத்தில் பதவி கிராமசேவகர் பிரிவில் பதவி பராக்கிரமபுர தெற்கில் அமைந்துள்ள காணித்துண்டு 2968 பொது நிலஅளவையாளரினால் தயாரிக்கப் பட்டு நிலவரைபடம் இல. TOPO P.P.**20 இல் சகலதும் பிரிக்கப்பட்டு அடையாளமிடப்பட்ட ஹொட இடம் என அறியப்படும் காணித் துண்டு ஒரு ஏக்கர் பதினொரு பேர்ச்சுகள் (1ஏ. 0றூ. 11பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.**

மேலே கூறப்பட்ட காணியின் அண்மையில் பின்வருமாறு மீள்அளவீடு செய்யப்பட்டது :-

பதவி பராக்கிரமபுர தெற்கில் அமைந்துள்ள பராக்கிரமபுர வத்த என்று அழைக்கப்படுகின்ற காணி (இக்காணித்துண்டு 2968 பொது நிலஅளவையாளரினால் 1987.01.28 ஆந் திகதியிடப்பட்டு தயாரிக்கப் பட்ட நிலவரைபடம் இல. TOPO P.P.**20 இல் அத்தாட்சிப்படுத்திக் கொடுக் கப்பட்ட இல. அனு/புர/18749) அனுமதிபெற்ற நிலஅளவையாளர் கே. கே. சின்னையா என்பவரினால் 2006.09.23 ஆந் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட நிலவரைபடம் இல. 289 இன் சகலதும் பிரிக்கப்பட்டு அடையாளமிடப்பட்டு அறியப்பட்டுள்ள துண்டு 1 கட்டிடங்கள், மரங்கள், பெருந்தோட்டம் மற்றும் (அனைத்துடனும்) நிலவரைபடம் இல. 289 இற்கு அமைய ஒரு ஏக்கர் பதினொரு பேர்ச்சுகள் (1ஏ. 0றூ. 11பே.) அல்லது 0.4325 ஹெக்டேயர் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது ஏலவிற்பனை**

("கடன்பட்டோர்" என்ற வகையில் பதவி பராக்கிரமபுரவைச் சேர்ந்த ரன்பண்டா குமாரசிங்க என அழைக்கப்படுகின்ற குமாரசிங்க முதியன்சலாகே ரன்பண்டா குமாரசிங்க மற்றும் உபாலி பிரேமரத்ன என்பவர்களுக்காக வழங்கப்பட்ட வசதிக்காக செலான் வங்கி பீ.எல்.சீ.க்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து.)

மேலே விவரிக்கப்பட்ட சொத்தை 2010, மே 11 ஆந் திகதி பி. ப. 1.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

காணியைச் சென்றடைகின்ற விதம்.- அனுராதபுரத்திலிருந்து சிறிபுர வீதி மார்க்கமாக மதவாச்சியைக் கடந்து பிரயாணம் செய்து கெப்பிட்டிஹொல்லாவ மற்றும் போகஸ் சந்தியில் சந்திக்கும் மணிக்கூட்டு கோபுர சந்தியில் உள்ள பதவிய வீதியினூடாக சுமார் 7 கி. மீ. தூரம் சென்று இடதுபுறமாக இருக்கும் பராக்கிரமபுர மகா வித்தியாலயத்திலிருந்து 500 மீற்றர் சென்றால் குறிக்கப்பட்ட சொத்து வலதுகைப்பக்கமாக வீதியின் அருகில் அமைந்துள்ளது.

தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.- 2009.12.24 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2009.12.17 ஆந் திகதிய "டெயிலி மிரர்", "லங்காதீப" பத்திரிகைகளையும் மற்றும் 2010.01.05 ஆந் திகதிய "தினக்குரல்" பத்திரிகையையும் பார்க்கவும்.

கட்டணம் செலுத்தும் முறை.- வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%) ; (2) உள்ளூர் அதிகாரசபைக்கான உள்ளூர் விற்பனை வரி அத்துடன் உள்ளூர் அதிகார சபைக்கு உள்ளூர் விற்பனை வரி (ஒரு வீதத்திற்குப் பதிலாக) அரசினால் அல்லது உள்ளூர் அதிகாரசபையினால் விதிக்கப்பட்ட வேறு ஏனைய வரி ; (3) ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2 %) ; (4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2,000 ; (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூபா 500 ; (6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையில் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சீ. இல் வைப்புச்செய்யப்படல் வேண்டும்.

காணி உறுதி ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை "சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீ. எல். சீ., செலிங்கோ செலான் டவர், இல. 90, காலி வீதி, கொழும்பு 3" என்ற விலாசத்தில் பெற்றுக்கொள்ளவும் பார்வையிடவும் முடியும். தொலைபேசி இல. : 2456285, 2456284, 2456276.

தயவுசெய்து எமது இணையத்தள முகவரி www.eseylan.com இற்கு தொடர்புகொண்டு எமது சொத்தின் ஏலவிற்பனை தளத்திற்கு வருகை தரவும்.

துசித கருணாரத்ன (ஜே. பி.),
அனுமதிபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்.

ரி. அன்ட் எச். ஒக்சன்,
இல. : 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவ.
தொலைபேசி : 2572940, 011-3068185.

4-157

சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழான விற்பனை அறிவித்தல்

சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை

கணக்கு இல. 0004 5004 1173 - ஏ. ஜீ. டபிள்யூ. பண்டார

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் 2009.07.28 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2009.09.25 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும் 2009.09.14 ஆந் திகதிய "திவயின", "ஐலண்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான நாற்பத்திரண்டு இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து அறுநூற்றுமுப்பத்து மூன்று ரூபா ஐம்பத்தேழு சதம் (ரூ. 42,56,633.57), 2009, ஏப்பிறல் 17 ஆந் திகதி முதல் இல. 1516 எனும் ஈட்டுமுறியின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதிவரை முப்பத்தேழு இலட்சத்து எழுபத்தேழாயிரத்து ஐநூற்றுநாற்பத்தைந்து ரூபா இருபத்தைந்து சதம் (ரூ. 37,77,545.25) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பன்னிரண்டு தசம் ஏழு ஐந்து வீதம் (12.75%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு கூறப்பட்ட இல. 1516 எனும் ஈட்டுமுறியின் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர் ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர் மூலமாக 2010.04.29 ஆந் திகதி மு. ப. 11.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என சம்பத் வங்கி பீ.எல்.சீ. இத்தால் தீர்மானிக்கின்றது.

அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளையின் அதிகாரி பத்துவின் களனி பிரதேச சபை எல்லைகளுக்குள் வராகொட வீரசிங்ஹ மாவத்தை, ஊடாக அமைந்த வரிமதிப்பீட்டிலக்கம் 65/1 (ஒரு பகுதி) ஐ ஏற்ற 'தெல்கஹாவத்தை' எனும் கொடக்கதுருகஹவத்தை எனும் கதுருகஹாவத்தை, உக்கஹாவத்தை, எகொட விட்ட இரியகஹாகும்புர, வெரலுகஹாவத்தை எனும் வெரலு கஹாஓவிட்ட, ஹிக்கஹாவத்தை மற்றும் "மூனமல்கஹாஓவிட்ட" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். டபிள்யூ. டீ. எஸ். டி. சில்வா என்பவரினால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1998, சனவரி 03 ஆந் திகதியிடப்பட்ட இல. 3978 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கிற்கு : எல். பீ. பீ. வீரசிங்ஹவின் காணி ; கிழக்கிற்கு : லொட் 2 ; தெற்கிற்கு : வரைபட இல. 599 இல் லொட் எவ் 2^6 (10 அடி அகல வீதி) மற்றும் ; மேற்கிற்கு : வீரசிங்ஹ மாவத்தை. இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் இருபத்து ஒன்று தசம் இரண்டு நான்கு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 21.24பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த நிலம், மரங்கள், பயிர்கள், கட்டிடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள் வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட வரைபட இல. 3978 இற்கு அமைவாக கொழும்பு காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் C651/208 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

வழி ஊடாகவும் அதன் மீதான வழி உரிமையுடன் :-

மேற்கூறப்பட்ட வராகொடயில் அமைந்த 'தெல்கஹாவத்தை' எனும் கொடக்க துருகஹவத்தை எனும் கதுருகாஹாவத்தை, உக்கஹாவத்தை, எகொடவிட்ட ஈரியகஹாகும்புர, வெரலுகஹாவத்தை எனும் வெரலு கஹாஓவிட்ட, ஹிக்கஹாவத்தை மற்றும் "மூனமல்கஹாஓவிட்ட" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். எம். டொனல்ட் என்பவரினால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1990, நவெம்பர் 15 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 599 இல் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் எவ் 2^6 (10 அடி அகல வீதிக்கான ஒதுக்கம்) எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கிற்கு: லொட் எப் 2^1 ; கிழக்கிற்கு : லொட்கள் எவ் 2^2 மற்றும் எவ் 2^3 ; தெற்கிற்கு : லொட்கள் எவ் 2^3, எவ் 2^4, எவ் 2^5 மற்றும் வரிமதிப்பீட்டிலக்கம் 67ஐ ஏற்ற தற்போது என். தர்மரத்ன உரிமை கோரும் வளவு ; மேற்கிற்கு : லொட்கள் எவ் 2^4 மற்றும் 2^5 மற்றும் வீரசிங்ஹ மாவத்தை இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் பன்னிரண்டு தசம் ஏழு ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 12.75பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணி. கூறப்பட்ட இல. 599 எனும் வரைபடத்திற்கு அமைவாக கொழும்பு காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் C656/86 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,
கம்பனிச் செயலாளர்.

4-169/3

சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழான விற்பனை அறிவித்தல்

சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை

கணக்கு இல. 1010 5306 5761 - ஆர். எம். விஜேகுமார

